# விண்ணப்பங்கள் கோரல்

# முயற்சியாண்மையும் சிறு வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி (CESBM) – Batch III - 2025

**தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான மையம் (CDCE)**
**வவுனியாப் பல்கலைக்கழகம்**

**வவுனியாப் பல்கலைக்கழகத்தினுடைய தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான மையத்தினுடாக தொழில் வழிகாட்டல்** அலகின் ஒருங்கிணைப்பில் நடாத்தப்படுகின்ற முயற்சியாண்மையும் சிறு வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**கற்கை நெறி விவரங்கள்**

- நுழைவுத் தகைமை: ஆகக் குறைந்தது தரம் 9 பாடசாலைக் கல்வி
  **அல்லது**
  ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்திருத்தலுடன் குறைந்த பட்சம் 2 வருட வேலை அனுபவத்தை கொண்டிருத்ததல்.
  குறைந்த பட்சம் 16 வயதினை பூர்த்தி செய்திருத்தல்
- காலம்: 06 மாதங்கள் **(விரிவுரைகள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.)**
- கற்கைநெறிக் கட்டணம்: ரூபா.24500 (பதிவுக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் உட்பட)
- இடம்: வவுனியாப் பல்கலைக்கழகம், பூங்கா வீதி, வவுனியா.
- விண்ணப்ப முடிவுத்திகதி: 10.01.2025

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் தகைமையை உறுதி செய்யும் ஆவண பிரதிகளையும், விண்ணப்பக்கட்டணமாக ரூபா.500.00ஐ கீழுள்ள கணக்கிலக்கத்திற்கு செலுத்தி அதற்கான மூலப்பிரதியையும் இணைத்து 10.01.2024 அல்லது அதற்கு முன்னர் **சிரேஸ்ர உதவிப் பதிவாளர் தொலைதூர மற்றும்தொடர் கல்விக்கான மையம், வவுனியாப் பல்கலைக்கழகம், பூங்கா வீதி, வவுனியா** என்ற முகவரிக்கு நேரடியாகவோ தபாலிலோ சமர்ப்பிக்கவும்.

- கணக்கின் பெயர் - வவுனியாப் பல்கலைக்கழகம்
- வங்கிக்கணக்கு இலக்கம் - 040-1-003-8-1640087
- வங்கி - மக்கள் வங்கி
- வங்கி குறியீடு - 7135
- வைப்புக்குறியீடு - CDE0005
- கிளை - வவுனியா

பாடசாலையை விட்டு வெளியேறியோர் (க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரம்), பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்கள், தொழில் முனைவோர்கள், வியாபாரத்தை ஆரம்பிக்க எதிர்பார்ப்பவர்கள், பொது மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், துறைசார் அறிவை மேம்படுத்த விரும்புவோருக்கு இக்கற்கைநெறி பயனுடையதாக அமையும்.

கற்கை நெறிக்கான விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை வவுனியாப் பல்கலைக்கழக இணையத்தில் (www.vau.ac.lk) தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

**குறிப்பு: கற்கைநெறிக்கட்டணம் மீள் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு எந்த கற்கைநெறிக்கோ, நபருக்கோ மாற்றப்படமுடியாது.**

**Online Banking, ATM இயந்திரத்தில் மேற்கொள்ளப்படும் வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது**

## மேலதிக தகவல்களுக்கு


சிரேஸ்ர உதவிப் பதிவாளர்

தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான மையம்
வவுனியாப் பல்கலைக்கழகம்
**தொடர்புகளுக்கு: இணைப்பாளர் 0774683308 / அலுவலகம்: 024 2223910**